# கீழக்கரை நகர்மன்ற 29.01.2021–ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

## பொருள் :1

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்டங்களில், நகராட்சிப் பகுதியில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரில் 2 PPM அளவுக்கு குளோரின் இருக்க வேண்டும் எனவும், தற்போது டெங்கு தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், நகராட்சிப் பகுதிகளில் சுத்தமான குடிநீர் வழங்குவதற்கு திரவ நிலையில் குளோரின் செலுத்தும் திட்டத்தினை (Gas/Liquid Chlorination System) செயல்படுத்துமாறு தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டு வருவதால், இந்நகராட்சி மூலம் வழங்கப்படும் குடிநீரின் அளவு 2 PPM இருக்கும் பொருட்டு, இந்நகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் கொந்தகருணை அப்பா தர்ஹா மணல்மேடு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் (OHT) அமைத்துள்ள வளாகத்தில் திரவ நிலையில் குளோரின் செலுத்தும் திட்டம் (Liquid Chlorination System) செயல்படுத்தும் பொருட்டு, மேற்கண்ட இடத்தில் குளோரின் திரவம் கலந்து குடிநீர் விநியோகம் செய்யும் குளோரினேஷன் அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது.

இந்நகர் பகுதியில்ஹைப்போ குளோரின் திரவம் (Liquid Chlorination) கலந்து குடிநீர் விநியோகம் செய்வதற்கு நாள் ஒன்றுக்கு 20 லிட்டர் அளவு என்ற அடிப்படையில் இந்நகராட்சிக்கு ஒரு வருடத்திற்கு 7280 லிட்டர் ஹைப்போ குளோரின் திரவம் (Hypo Chlorine Solution) தேவையாக உள்ளதால் இந்நகராட்சிக்கு As per IS 11673:1992 ஹைப்போ குளோரின் திரவம் (Hypo Chlorine Solution) விநியோகம் செய்யும் பணிக்கு 2020–2021 ஆம் ஆண்டு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மதிப்பீடு தயார் செய்வதற்கு ஏதுவாக பொதுப்பணித்துறை / குடிநீர் வடிகால் வாரிய விலை விகிதப் பட்டியலில் (Schedule of Rate) விலைவிகிதங்கள் குறிப்பிடப்படாத, கீழ்காணும் பொருட்களுக்கு லிட்டர் ஒன்றிற்கு விலை விகிதம் குறிப்பிட்டு உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெறுவதற்கு 23.12.2020–ந் தேதி இந்நகராட்சிப் பொறியாளரால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அதன்படி உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெறுவதற்கு 31.12.2020–ந் தேதி இந்நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது.

இந்நகர்மன்ற அனுமதியின்படி, இந்நகராட்சிக்கு ஹைப்போ குளோரின் திரவம் (Hypo Chlorine Solution) விநியோகம் செய்வதற்கு லிட்டர் ஒன்றிற்கு GST குறிப்பிட்டு விநியோகம் செய்வதற்கு 06.01.2021–ந் தேதி அறிவிப்பு செய்யப்பட்டு 13.01.2021–ந் தேதி வரப்பெற்றுள்ள கீழ்காணும் விவரப்படியான இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| S. No. | Item Description | Rate | நிறுவனத்தின் பெயர் | |
|---|---|---|---|---|
| | | | Surya Agency, TWAD Board Class - 1 Contractor L9, 3rd cross street, R.M. Colony, Dindigul-624001 | K.S.P& Co. TWAD TNEB & Highways Class-I Contractor 1/3-20A Paruvan street, Gonur (Post), Mettur Dam, Salem-636 404 |
| 1 | Supply and delivery of Sodium Hypo chloride solution with the concentration of 6.25% as per IS 11673:1992 | Per Liter / kg | Rs. 22.50 Per kg | Rs. 2 4.25 Per kg |
| சரக்கு மற்றும் சேவை வரி தனி (G.S.T.) | | | | |

இந்நகராட்சிக்கு ஹைப்போ குளோரின் திரவம் விநியோகம் செய்வதற்கு சரக்கு மற்றும் சேவை வரி நீங்கலாக (Excluding GST) லிட்டர் ஒன்றிற்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள சூர்யா ஏஜென்ஸி, திண்டுக்கல் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியளார்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மேலும், அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு மதிப்பீடு தயார் செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.
(கோப்பு எண்.785/2020/இ1)

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. ஹைப்போ குளோரின் திரவம் (Hypo Chlorine Solution) கலந்து குடிநீர் விநியோகம் செய்வதற்கு தேவையான ஹைப்போ குளோரின் திரவம் விநியோகம் செய்வதற்கு சரக்கு மற்றும் சேவை வரி நீங்கலாக (Excluding GST) லிட்டர் ஒன்றிற்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள சூர்யா ஏஜென்ஸி, திண்டுக்கல் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஹைப்போ குளோரின் திரவம் விநியோகம் செய்வதற்கு கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு உரிய மதிப்பீடு தயார் செய்வதற்கு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரிடம் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.822 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் :2</u>

கீழக்கரை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களான 1. தினசரி சந்தை 2. பேருந்து நுழைவு கட்டணம் 3. மீன்மார்க்கெட்டில் மீன் வெட்டும் உரிமம் ஆகிய மூன்று இனங்களுக்கான குத்தகை உரிமம் 31.03.2021 உடன் முடிவடைய உள்ளது. மேற்படி குத்தகை உரிமத்தில் மீன் மார்க்கெட்டில் மீன் வெட்டும் உரிமம் ஏலம் விடுவதற்கு மீன் வெட்டுவதற்கான போதிய இடம் இல்லாததாலும் பொதுமக்களுக்கு இடையூறாக இருப்பதாலும் பொதுசுகாதாரகேடு ஏற்படுவதாலும் மேற்காணும் மீன் வெட்டும் குத்தகை உரிமத்தை ரத்து செய்தும் தினசரி சந்தை குத்தகை உரிமம் மற்றும் பேருந்து நுழைவு கட்டணம் ஆகிய இரண்டு இனங்களுக்கு 01.04.2021 முதல் மூன்றாண்டு தொகுப்பாக ஏலம் விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**(கோப்பு எண் 132/2016/எச்1)**
**<u>அலுவலக குறிப்பு</u>**

1. இனம் எண் 1–ஐ ரத்து செய்யலாம்.

2. வரிசை எண் 2, 3 –ஐ 01.04.2020 முதல் குத்தகை விடுவதற்கு பொது ஏல நிபந்தனைகளுடன் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.823 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் :3</u>

சிறப்பு சாலை மேம்பாட்டுத் திட்டம் (Special Road Programme) 2020–21ன் கீழ் இந்நகராட்சிப் பகுதிகளில் சாலைப்பணிகள் ரூ.100 இலட்சத்திற்கு மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.803, நாள்.11.12.2020–ன்படி அனுமதி வழங்கப்பட்டு, சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 20557/2020/இ3 நாள்.15.12.2020 மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக, முதன்மை தலைமை பொறியாளர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.23659/2020–45/DO2, நாள்.22.12.2020–ன்படி நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி மேற்காணும் பணிக்கு 11.01.2021–ந் தேதி மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை சென்னை, விளம்பர வெளியீட்டு ஆணை எண். 4834/2020 நாள். 22.12.2020ந் தேதிய பரிந்துரையின்படி, சென்னை, அகார்ட் அட்வர்டைசிங் நிறுவனம் மூலம் 23.12.2020–ம் தேதி ஒரு ஆங்கில தினசரி நாளிதழ் மற்றும் தமிழ் தினசரி நாளிதழில் மாநில அளவில் அனைத்து பதிப்புகளிலும் (All Edition in the State) பிரசுரம் செய்யப்பட்டதற்கான விளம்பரக் கட்டணம் (வரிகள் உட்பட) ரூ.88,150/–க் குரிய பட்டியல் எண். எண்.AAA/0569/20-21 நாள்.27.12.2020–ன்படியானது இந்நகராட்சிக்கு 13.01.2021–ந்தேதி வரப்பெற்றுள்ளது.

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி விளம்பர கட்டணம் ரூ.88,150/–மட்டும் சென்னை, அகார்ட் அட்வர்டைசிங் ஏஜென்ஸிக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

[கோப்பு எண்.656/2020/இ1]

<u>அலுவலகக் குறிப்பு:</u>

சென்னை, அகார்ட் அட்வர்டைசிங் ஏஜென்ஸி விளம்பர கட்டணம் ரூ.88,150/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.824 அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் :4

சிறப்பு சாலை மேம்பாட்டுத் திட்டம் (Special Road Programme) 2020–21ன் கீழ் இந்நகராட்சிப் பகுதிகளில் சாலைப்பணிகள் ரூ.100 இலட்சத்திற்கு மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.803, நாள்.11.12.2020–ன்படி அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி மேற்காணும் பணிக்கு 11.01.2021–ம் தேதி மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப கூறல் (Technical Bid) ஒப்பந்த ஆவணத்தின்படி நிபந்தனைகளை நிறைவு செய்திருப்பதாக இந்நகராட்சி தொழில்நுட்ப கூராய்வு குழுவால் ஆய்வு செய்து 13.01.2021–ந் தேதி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கீழ்க்காணும் விலைக்கூறல் (Price Bid) 21.01.2021-ந் தேதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்படி தயார் செய்யப்பட்ட ஒப்புநோக்கு பட்டியல் இந்நகராட்சி பொறியாளர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

மதிப்பீடு ரூ. 100 இலட்சம்

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்ததாரரின் ஒப்பந்ததொகை ரூபாய் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 இரண்டு குறுக்குத் தெரு, வார்டு எண்.2 அன்புநகர் 2–வது குறுக்கு தெரு, வார்டு எண்.3 புதுகிழக்குத் தெரு, கிழக்குத் தெருவில் மூன்று குறுக்கு சாலை, பட்டாணியப்பா தர்ஹா 1, 2, 3 குறுக்கு சாலைகள், வார்டு எண்.6 ஒரு குறுக்கு சாலை, வார்டு எண்.10 சேரான் தெரு மற்றும் வார்டு எண்.12 ஜின்னா தெரு குறுக்கு சாலை ஆகிய பகுதிகளில் பேவர்கல் சாலைகள் அமைக்கும் பணி | எம்.கே. திருமுருகன், எண்.27, வடக்கு புதுத்தெரு, இராமநாதபுரம் – 623 501 | ரூ. 1,03,12,069/– மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் 4.90% கூடுதல் |
| | | பி. சுப்பிரமணியன் 28/5, சிதம்பரனாதபுரம் முதல் தெரு, தேவகோட்டை சிவகங்கை –630302 | ரூ. 1,08,03,476/– மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் 9.90% கூடுதல் |

**[கோப்பு எண்.656/2020/இ1]**

**அலுவலகக் குறிப்பு.**

1. ஒப்பந்தகாரர் மதிப்பீட்டு தொகையை விட 4.90% கூடுதலாக விலை விகிதம் கொடுத்துள்ளதை விலை குறைப்பு செய்து கொடுக்க கோரியதில், கோவிட்–19 ஊரடங்கு காலத்திலிருந்து இதுநாள்வரை மேற்கண்ட பணிக்குரிய மூலப்பொருட்கள் மார்க்கெட்டில் கிடைப்பதில் தட்டுப்பாடாகவும், விலை ஏற்றம் மற்றும் வேலை ஆட்களின் கூலி உயர்வு காரணமாக மேற்கண்ட பணியின் மதிப்பீட்டைக் காட்டிலும் குறைவாக விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்ததின் அடிப்படையில் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் (+) 4.90 சதவீதம் கூடுதலில் குறைவாக கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.
2. திட்டப்பணிக்குரிய மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாகும் செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. நகராட்சி பொறியியல் கையேடு (Engineering Manual) தொகுதி 1 பகுதி பிரிவு 2.7.2–ல் பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசரம் கருதி முதல் அழைப்பிலேயே (First Call) மதிப்பீட்டை விட 5 சதவீதம் வரை கூடுதலாக உள்ள நகர்மன்ற வரம்பிற்கு உட்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.825 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :5**

2020–21 ஆம் ஆண்டு இராமநாதபுரம் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்ட நிதியிலிருந்து, இந்நகராட்சி வார்டு எண்.3 முகைதீன் ஜூம்மா மஜ்ஜித் புதுகிழக்கு தெரு அருகில் LED மின் விளக்குகள் ரூ.5.00 மதிப்பீட்டில் அமைப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட வளர்ச்சி முகமை இராமநாதபுரம் அவர்களின் செயலாணைகள் ந.க.ஆர்4/2075/2020, நாள்.24.12.2020–ன்படி, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணி செய்வதற்கு 20.01.2021 –ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்ததாரரின் ஒப்பந்ததொகை ரூபாய் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| **இராமநாதபுரம் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2020–2021** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சி வார்டு எண்.3 முகைதீன் ஜூம்மா மஜ்ஜித் புதுகிழக்கு தெரு அருகில் LED மின் விளக்கு அமைத்தல். | 5.00 | அம்பாள் எலக்ட்ரிக்கல், 2/826–1, மருதுபாண்டியர் தெரு, மதுரை–20 | ரூ. 4,97,756/– மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் 0.03% குறைவு |
| | | | சிவா ஜாப் ஒர்க்ஸ், 5/558, சத்திய கோபால் தெரு, சதாசிவா நகர், மதுரை–20 | ரூ. 4,98,523/– மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் 0.13% கூடுதல் |

**[கோப்பு எண்.619/2020/இ1]**

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை காட்டிலும் 0.03% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள அம்பாள் எலக்ட்ரிக்கல்ஸ் மதுரை, நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.826 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :6**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 பழைய உரக்கிடங்கில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி மதிப்பீடு ரூ.8,50,000/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர் மன்றத்தில் 31.12.2020—ந் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பழைய உரக்கிடங்கிற்கு சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு 29.01.2021—ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **வருவாய் நிதி 2020—2021** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 பழைய உரக்கிடங்கில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி | 8.50 | திரு.ஆர். உத்தண்டி ஒப்பந்ததாரர், எண்.1/556ஏ, 9—வது தெரு, நேரு நகர், இராமநாதபுரம். | ரூ.8,14,431/— மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.37% குறைவு |
| | | | திரு.பி. சிவக்குமார் ஒப்பந்ததாரர், 21/52, மெயின் ரோடு தட்டாந்தோப்பு, கீழக்கரை. | ரூ.8,39,820/— விலை விகிதத்தினை விட 2.74% அதிகம் |

**(கோப்பு எண். 782/2020/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.37% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஆர். உத்தண்டி என்பவரின் விலைப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.827 அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் :7</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.04, கிழக்குத் தெரு பள்ளிவாசல் (ஆட்டோ ஸ்டாண்ட்) அருகில் அமைந்துள்ள உயர்மின்கோபுர விளக்கு, வார்டு எண்.17 தெற்குத் தெரு வடக்குத் தெரு சந்திப்பில் அமைந்துள்ள உயர்மின்கோபுர விளக்கு மற்றும் வார்டு எண்.15 மேலத்தெரு புதுப்பள்ளி, பெண்கள் மேல்நிலைப்பள்ளி அருகில் அமைந்துள்ள உயர்மின் கோபுர விளக்குகள் (High Mast Light) பழுதுநீக்கம் செய்யும் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.3,00,000/– யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர் மன்றத்தில் 31.12.2020–ந் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பழுதான மூன்று உயர்மின் கோபுர விளக்குகள் பழுதுநீக்கம் செய்யும் பணிக்கு 29.01.2021–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம்.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | | **<u>வருவாய் நிதி 2020–2021</u>** | | |
| 1. | கீழக்கரை நகராட்சி வார்டு எண்.4 கிழக்குத் தெரு, வார்டு எண்.15 மேலத்தெரு மற்றும் வார்டு எண்.17 வடக்குத் தெரு ஆகிய பகுதிகளில் அமைக்கப் பட்டுள்ள உயர்மின் கோபுர விளக்குகள் (High Mast Light) பழுதுநீக்கம் செய்யும் பணிகள். | 3.00 | திரு.பி.எம். கஜேந்திரன், ஒப்பந்ததாரர், 21/33, தட்டான் தோப்பு தெரு, கீழக்கரை. | ரூ.2,91,908/– மதிப்பீட்டு தொகைக்கு 0.07% குறைவு |
| | | | ஸ்ரீ மங்களம் எலக்ட்ரிக்கல்ஸ் & சானிடைசர்ஸ், புதிய பேருந்து நிலையம் அருகில், கீழக்கரை | ரூ.2,92,533/– மதிப்பீட்டு தொகைக்கு 0.15% அதிகம் |

**<u>(கோப்பு எண். 761/2020/இ1)</u>**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மதிப்பீட்டு தொகையை விட 0.07% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி.எம். கஜேந்திரன், ஒப்பந்ததாரர் , கீழக்கரை என்பவரின் விலைப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் எண்.828 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :8</u>**

கீழக்கரை நகராட்சி அலுவலகத்தில் வட்டாட்சியர் அலுவலகம் செயல்பட்டு வந்த பகுதிகள் மராமத்து பணி, Genset மூலம் மின்சாரம் செல்வதற்கு வயரிங் செய்யும் பணி, கழிவறை மராமத்து பணிகள், முன்னாள் சேர்மன் அறை மராமத்து மற்றும் இதர பழுது நீக்கப் பணிகள் ரூ.5,00,000/– மதிப்பீட்டில் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர் மன்றத்தில் 31.12.2020–ந் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 29.01.2021–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம்.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **வருவாய் நிதி 2020–2021** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சி அலுவலக கட்டிடத்தில் அமைந்துள்ள முன்னாள் சேர்மன் அறை மராமத்து மற்றும் ஏற்கனவே வட்டாட்சியர் அலுவலகம் செயல்பட்ட பகுதிகளில் கழிவறை மராமத்து, Genset மூலம் மின்சாரம் செல்வதற்கு வயரிங் செய்யும் பணி மற்றும் அலுவலக கட்டிட மராமத்து பணி. | 5.00 | திரு.பி. சிவக்குமார் ஒப்பந்ததாரர், 21/52, மெயின்ரோடு தட்டாந்தோப்பு, கீழக்கரை. | ரூ.4,65,241/– மதிப்பீட்டு தொகைக்கு 0.33% குறைவு |
| | | | திரு.ஆர். உத்தண்டி ஒப்பந்ததாரர், எண்.1/556ஏ, 9–வது தெரு, நேரு நகர், இராமநாதபுரம். | ரூ.4,80,032/– மதிப்பீட்டு தொகைக்கு 2.84% அதிகம் |

<u>(கோப்பு எண். 783/2020/இ1)</u>

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மதிப்பீட்டு தொகையை விட 0.33% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.பி. சிவக்குமார் என்பவரின் விலைப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் எண்.829 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :9</u>**

இந்நகராட்சி தெரு விளக்கு பராமரிப்பு, குடிநீர் மின்மோட்டார் மற்றும் கழிவு நீர் மின்மோட்டர்கள்/ ஆயில் என்ஜின்களை பராமரிப்பு பணிகள் ஒரு நபரைக் கொண்டு வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) 01.02.2021 முதல் 31.07.2021 வரை ஆறு மாதங்களுக்கு பணிகள் மேற்கொள்ளவும், அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செய்யவும், 31.12.2020–ந் தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிகள் செய்வதற்கு 29.01.2021–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **<u>வருவாய் நிதி–2020–2021</u>** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சி தெருவிளக்குகள் பராமரிப்பு, குடிநீர் மற்றும் கழிவு நீரேற்று நிலையங்களில் உள்ள மின்மோட்டர்கள் / ஆயில் என்ஜின்கள் பராமரிப்பு பணிகள் வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) மேற்கொள் வதற்கு 01.02.2021 முதல் 31.07.2021 வரை ஆறு மாதங்களுக்கு ஒரு நபர் வழங்குதல். | 1.01 | M/s. எவர்கிரீன் என்விரான்மென்ட் சர்வீசஸ், 15/18, லெட்சுமி காம்ப்ளக்ஸ், இரயில்வே பீடர் ரோடு, இராமநாதபுரம். | ரூ.99,792/– மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.40% குறைவு |
| | | | M/s. எக்ஸ்லர்நெட், 8, கல்பாலம் ரோடு கோரிப்பாளையம், மதுரை. | ரூ.1,00,397/– மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.20% அதிகம் |

**<u>(ந.க.எண்.795/2020/இ1)</u>**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட 0.40% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. எவர் கிரீன் என்விரான்மென்ட் சர்வீசஸ், இராமநாதபுரம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் எண்.830 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :10</u>**

கீழக்கரை நகராட்சி பராமரிப்பில் உள்ள வார்டு எண்.1 புதிய பேருந்து நிலைய பின்புறம் உள்ள மாட்டுக் கொட்டகை, வார்டு எண்.16 புதுக்குடி மற்றும் வார்டு எண்.21 தட்டான்தோப்பு ஆகிய மூன்று கழிவு நீர் ஏற்ற நிலையத்தில் உள்ள மின்மோட்டார் / ஆயில் என்ஜின்களை இயக்குவதற்கும், மேலும், அப்பகுதியில் அமைந்துள்ள கழிவுநீர் தொட்டிகளை பராமரிக்கும் பணிகளை ஆறு நபர்களை கொண்டு வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) 01.02.2021 முதல் 31.07.2021 வரை ஆறு மாதங்களுக்கு பணிகள் மேற்கொள்ளவும், அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செய்யவும், 31.12.2020–ந் தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிகள் செய்வதற்கு 29.01.2021–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **<u>குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2020–2021</u>** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள மூன்று கழிவு நீரேற்று நிலையங்களில் உள்ள மின்மோட்டார் / ஆயில் என்ஜின்களை இயக்குதல் மற்றும் கழிவு நீர் தொட்டிகளைப் பராமரித்தல் இரவு மற்றும் பகல் பணிகள் வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) மேற்கொள்வதற்கு 01.02.2021 முதல் 31.07.2021 வரை ஆறு மாதங்களுக்கு 3 கழிவு நீரேற்று நிலையத்திற்கு இருவர் வீதம் ஆறு நபர்கள் வழங்குதல். | 6.30 | M/s. எவர்கிரீன் என்விரான்மென்ட் சர்வீசஸ், 15/18, லெட்சுமி காம்ப்ளக்ஸ், இரயில்வே பீடர் ரோடு, இராமநாதபுரம். | ரூ.6,26,573/– மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட 0.38% குறைவு |
| | | | M/s. எக்ஸர்நெட், 8, கல்பாலம் ரோடு கோரிப்பாளையம், மதுரை. | ரூ.6,31,411/– மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட 0.38% அதிகம் |

<u>(ந.க.எண். 794/2021/இ1)</u>

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட 0.38% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. எவர் கிரீன் என்விரான்மென்ட் சர்வீசஸ், இராமநாதபுரம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் எண்.831 அனுமதிக்கப்பட்டது.</u>**

**பொருள் :11**

**கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட சேதுக்கரை மற்றும் மாலாங்குண்டு குடிநீர் ஏற்று** நிலையங்களில் உள்ள மோட்டார் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் இரண்டு நபர்களைக் கொண்டு வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) 01.02.2021 முதல் 31.07.2021 வரை ஆறு மாதங்களுக்கு பணி மேற்கொள்வதற்கும், அதற்குரிய செலவினங்கள் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செய்வதற்கும், 11.12.2020–ந் தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிகள் செய்வதற்கு 29.01.2021–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | | **குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2020–2021** | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட சேதுக்கரை மற்றும் மாலாங்குண்டு குடிநீர் ஏற்று நிலையங்களில் உள்ள மோட்டார் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) மேற்கொள்வதற்கு 01.02.2021 முதல் 31.07.2021 வரை ஆறு மாதங்களுக்கு இரண்டு நபர்கள் வழங்குதல். | 2.10 | M/s. எவர்கிரீன் என்விரான்மென்ட் சர்வீசஸ், 15/18, லெட்சுமி காம்ப்ளக்ஸ், இரயில்வே பீடர் ரோடு, இராமநாதபுரம். | ரூ.2,08,858/– மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் 0.38% குறைவு |
| | | | M/s. எக்ஸர்நெட், 8, கல்பாலம் ரோடு கோரிப்பாளையம், மதுரை. | ரூ.2,10,470/– மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் 0.38% அதிகம் |

(ந.க.எண். 728/2020/இ1)

அலுவலகக் குறிப்பு:

மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட 0.38% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. எவர் கிரீன் என்விரான்மென்ட் சர்வீசஸ், இராமநாதபுரம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.832 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் :12

தூய்மை இந்தியா இயக்கம் – திடக்கழிவு மேலாண்மை பணிகள் 2018–2019 ஆம் ஆண்டு திட்டம் செயல்படுத்தும் பொருட்டு 13.08.2018–ந் தேதி நடைபெற்ற 7–வது மாநில உயர்மட்ட குழு கூட்ட நடவடிக்கைகள் மற்றும் இந்நகர்மன்ற தீர்மான எண்.418, நாள்.21.08.2018 ஆகியவற்றின்படி, இந்நகராட்சிக்கு ரூ.158.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 22866/2018/பி3, நாள்.23.08.2018–ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது (GOI- 35%, State Share- 55%, ULB Share- 10%). மேற்காணும் திட்டப் பணிகளுக்குரிய ஒதுக்கீட்டில், இந்நகராட்சிக்குட்பட்ட இரண்டு இடங்களில் நுண் உரம் செயலாக்க மையம் (Construction of Micro Compost Centre) அமைக்கும் பணி செய்வதற்கு ரூ.120 லட்சத்திற்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் செயல்முறை ஆணை ந.க.எண்.18281/2017/டிஒ2, நாள்05.10.2018–ன்படி தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1. | வார்டு எண்.2 இந்துக்கள் மயானம் பகுதியில் நுண் உரம் செயலாக்க மையங்கள் (Construction of Micro Composted Centre) அமைக்கும் பணி. | 60.00 |
| 2. | வார்டு எண்.3 பழைய உரக்கிடங்கு பகுதியில் நுண் உரம் செயலாக்க மையங்கள் (Construction of Micro Composted Centre) அமைக்கும் பணி. | 60.00 |

இந்நகராட்சிக்குட்பட்ட மேற்காணும் இரண்டு இடங்களில் நுண் உரம் செயலாக்க மையம் (Construction of Micro Composted Centre) அமைக்கும் பணிகள் மேற்கொள்ள 13.11.2018–ந் தேதி மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதனை தொடர்ந்து இந்நகர்மன்ற தீர்மான எண்.492, நாள். 28.12.2018–ன்படி ஒப்பந்ததாரர் திரு.எஸ்.எம். முனியசாமி என்பவருக்கு 09.01.2019–ந் தேதி பணி உத்திரவு வழங்கப்பட்டது.

மேற்காணும் இரண்டு பணிகளில் வார்டு எண்.3 பழைய உரக்கிடங்கு பகுதியில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் நுண் உரம் செயலாக்க மையம் (Construction of Micro Composted Centre) அமைக்கும் பணி முடிவுற்ற நிலையில், வார்டு எண்.2 இந்துக்கள் மயானம் பகுதியில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் நுண் உரம் செயலாக்க மையம் (Construction of Micro Composted Centre) அமைப்பதற்குரிய துவக்ககட்ட பணிகள் ஒப்பந்ததாரரால் மேற்கொண்ட போது, அப்பகுதி பொதுமக்கள் மற்றும் ஒரு சில அமைப்புகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து, இத்திட்டப் பணியினை மயானம் பகுதியில் நடைபெற விடாமல் தடுத்து வந்தனர். மேலும், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண்.WRIT APPEAL (MD) 72/2009 & M.P. (MD) 1/2009–ன்படி 02.11.2009–ந் தேதி தடை உத்திரவு வழங்கியுள்ளதாகவும் தெரிவித்து, மீறி பணிகள் நடைபெற்றால் சாலை மறியலில் ஈடுபடப் போவதாகவும் எச்சரித்து வந்தனர். அப்பகுதி மக்களிடம் இத்திட்டத்தின் பயன்பாடு மற்றும் நன்மைகளை விரிவாக எடுத்து கூறியும், போதிய ஒத்துழைப்பு இல்லாமல் பணியினை மேற்கொள்ள இயலாத சூழ்நிலை ஏற்பட்டது.

அதனை தொடர்ந்து நுண் உரம் செயலாக்கும் மையம் அமைக்கும் பணி அரசின் திட்டமாக இருப்பதாலும், பொதுமக்களின் பயன்பாட்டிற்கு பணியினை கொண்டு வருவதில் காலதாமதம் ஏற்பட்டு வருவதாலும், பொது நன்மை கருதியும், அத்தியாவசிய பொதுசுகாதார செயல்பாட்டை உறுதி செய்ய வேண்டிய சூழலில், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், நகராட்சிக்கு சொந்தமான இடங்கள் ஏதும் இல்லாத நிலையில், இத்திட்டப் பணியினை பழைய உரக்கிடங்கு Bio Mining மூலம் குப்பைகள் அப்புறப்படுத்தப்பட்ட பகுதியில், தற்போது இத்திட்டத்தினை செயல்படுத்தினால் ஒரே இடத்தில் அனைத்து பணிகளும் உரிய முறையில் செய்வதற்கு ஏதுவாக அமையும் என்றும், வார்டு எண்.2 மற்றும் எண்.3–ல் உள்ள பகுதிகள் தூர வித்தியாசம் இல்லாமல் அருகாமையில் அமைந்துள்ளதால், வார்டு எண்.3 பழைய உரக்கிடங்கிலேயே ரூ.60 இலட்சம் மதிப்பீட்டிலான நுண் உரம் செயலாக்க மையம் அமைக்கும் Construction of Micro Composted Centre) பணியை தற்போது ஒப்பந்தம் எடுத்துள்ள அதே ஒப்பந்ததாரர் மூலமாகவே, பணியினை உடனடியாக செய்து

முடிப்பதற்கு 30.12.2019–ந் தேதிய இந்நகராட்சி பொறியாளரின் அறிக்கையின்படி, திட்டப் பணியினை உடனடியாக செயல்படுத்தும் பொருட்டு, கீழ்காணும் இடத்தில் பணியினை மேற்கொள்ள மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டு, இந்நகர்மன்ற தீர்மான எண்.678, நாள். 06.01.2020–ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1. | வார்டு எண்.3 பழைய உரக்கிடங்கு பகுதியில் நுண் உரம் செயலாக்க மையங்கள் (Construction of Micro Composted Centre) அமைக்கும் பணி. | 60.00 |

இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே நகராட்சி நிர்வாக ஆணையாளரால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட வார்டு எண்.2ல், இந்துக்கள் மயான பகுதியில் 5TPD நுண் உர செயலாக்க கூடம் (MCC) அமைக்கும் பணிக்கு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால், அவ்வவிடத்திற்கு மாற்றாக வார்டு எண்.3 பழைய உரக்கிடங்கில் அதே திட்ட மதிப்பீட்டில் ஏற்கனவே ஒப்பந்தம் செய்துள்ள அதே ஒப்பந்ததாரர் மூலம் நுண் உர கூடம் அமைக்கும் பணியை மேற்கொள்ள இந்நகர்மன்ற அனுமதியின்படி திருத்திய நிர்வாக அனுமதி கோரப்பட்ட திட்டப் பிரேரணை மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.756/2018/பி2, நாள். 08.02.2020–ன்படி பரிந்துரைக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை–28 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.22866/தி3/2018, நாள். 30.05.2020ன்படி திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

இந்நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசியம் கருதி, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் வழங்கப்பட்ட திருத்திய நிர்வாக அனுமதியின்படி, வார்டு எண்.3 பழைய உரக்கிடங்கில் 5TPD நுண் உர செயலாக்க கூடம் (MCC) அதே திட்ட மதிப்பீட்டில் ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்தத்தின் (Agreement) அடிப்படையில் நுண் உரம் செயலாக்க மையம் அமைக்கும் (Construction of Micro Compost Centre) பணியினை முடித்து கொடுக்குமாறு ஒப்பந்தாரர் திரு.எஸ்.எம். முனியசாமி என்பவருக்கு இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.635/2018/இ1, நாள். 18.06.2020–ன்படி திருத்திய பணி உத்திரவு வழங்கப்பட்டது.

இந்நகராட்சிப் பகுதியில் தூய்மை இந்தியா இயக்கம் – திடக்கழிவு மேலாண்மை பணிகள் 2018–2019 ஆம் ஆண்டு வார்டு எண்.3 பழைய உரக்கிடங்கு பகுதியில் நுண் உரம் செயலாக்க மையங்கள் (Construction of Micro Composted Centre) அமைப்பதற்கு, துவக்கக்கட்டப் பணியான மண் தோண்டும் பணியினை (Earth work) 10.08.2020–ந் தேதி ஒப்பந்ததாரர் திரு.எஸ்.எம். முனியசாமி அவர்களால் மேற்கொண்டபோது, அப்பகுதி மக்கள் மேற்கண்ட இடத்தில் பணி செய்ய விடாமல் தடுத்தனர். அப்பகுதி மக்களுக்கு நுண் உரம் செயலாக்க மையங்கள் அமைக்கும் பணியின் சிறப்பினை எடுத்துக்கூறப்பட்டது. ஆனால் அப்பகுதி மக்கள் மிகவும் எதிர்ப்பு தெரிவித்து வந்ததால் கீழக்கரை, காவல் ஆய்வாளர் மூலம் பணி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிலையில், இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதி உறுப்பினர் மாண்புமிகு நவாஸ்கனி அவர்கள் 14.08.2020–ந் தேதி கீழக்கரை நகராட்சிக்கு வருகை புரிந்து நுண் உரம் செயலாக்க மையங்கள் (Construction of Micro Composted Centre) அமைக்கப்பட உள்ள பகுதியினை ஆய்வு செய்தார்கள். இத்திட்டத்தி ன் சிறப்பு மற்றும் மக்களுக்கான பயன்பாடு குறித்து இந்நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் மூலம் மாண்புமிகு இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதி உறுப்பினர் அவர்களுக்கு எடுத்து கூறப்பட்டது. அந்த சமயத்திலும் பொது மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் செய்ததால், அப்பகுதியில் நுண் உரம் செயலாக்க கூடம் அமைக்கும் பணியை நிறுத்தி வைக்குமாறு வாய் மொழி உத்திரவாக கூறினார்கள்.

அதனை தொடர்ந்து, மாண்புமிகு இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான திரு. மணிகண்டன் அவர்கள் நுண் உரம் செயலாக்க மையங்கள் (Construction of Micro Composted Centre) அமைக்கப்பட உள்ள பகுதியினை 18.08.2020–ந் தேதி ஆய்வு செய்து, அப்பகுதி மக்களிடம் இத்திட்டத்தின் பயன்பாட்டினை விரிவாக எடுத்துக் கூறியும், அப்பகுதி முக்கியஸ்தர்கள் பலர் கடும் எதிர்ப்பு தெரிவித்ததால், இந்த திட்டம் இப்பகுதியில் செயல்படாது என்று அப்பகுதி பொதுமக்களிடம் தெரிவித்தார். மேலும், நகராட்சி ஆணையரிடம் இத்திட்டத்தினை செயல்படுத்த வேறு இடம் உள்ளதா என்று வினவினார். இந்நகராட்சிக்குட்பட்ட பகுதி சுமார் 2.59 ச.கி.மீ சுற்றளவு மட்டுமே உள்ளதால் இத்திட்டத்தினை செயல்படுத்த நகராட்சிக்கு சொந்தமான

வேறு இடம் ஏதும் இல்லை என்று மாண்புமிகு இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு எனில் இப்பகுதியில் இத்திட்டத்தினை செயல்படுத்த வேண்டாம் என்று சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் வாய் மொழியாக தெரிவிக்கப்பட்டது. மேலும், இது தொடர்பாக பல்வேறு இயக்கங்கள் மற்றும் அரசியல் அமைப்புகள் இவ்வலுவலகத்தில் நேரடியாக எதிர்ப்பு தெரிவித்து மனு செய்துள்ளனர்.

சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரால் 30.05.2020–ந் தேதி வழங்கப்பட்ட திருத்திய நிர்வாக அனுமதியின்படி, இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 பழைய உரக்கிடங்கில் ரூ.60 லட்சம் மதிப்பீட்டிலான நுண் உரம் செயலாக்கும் மையம் (Construction of Micro Compost Centre) அமைக்கும் பணி மேற்கொள்ள அப்பகுதி பொதுமக்கள் பல்வேறு இயக்கங்கள் மற்றும் அரசியல் அமைப்புகள் எதிர்ப்பாலும், மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் வாய்மொழி உத்திரவாலும், இத்திட்டத்தினை செயல்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் 29.12.2020–ந் தேதி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில், நகராட்சி நிர்வாக ஆணையர் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் நகராட்சிகளில் Bio mining முறையில் குப்பைகளை பிரித்தெடுத்து உரமாக்கி கழிவுகளை அகற்றும் பணிகள் செய்வதற்கு முன்னுரிமை அளித்து 31.03.2021–க்குள் பணிகளை முடிக்குமாறு ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. மேற்காணும் ஆய்வுக் கூட்ட நிகழ்வுகள் நகராட்சி நிர்வாக ஆணையரக கடிதம் ந.க.எண்.39259/2015/பி3 20.01.2021–ந் தேதிய கடிதத்துடன் இணைத்து வரப்பெற்றுள்ளது. அதனை தொடர்ந்து இந்நகராட்சி ஆணையாளர், மற்றும் நகராட்சி பொறியாளர்கள், மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக செயற்பொறியாளர் அவர்களிடம் கலந்தாலோனை செய்து வழங்கப்பட்ட அறிவுரையின்படி, திட்டப்பணியினை உடனடியாக செய்து முடிக்கும் பொருட்டு, கீழ்காணும் இடத்தில் பணியினை மேற்கொள்ள புதிதாக மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1. | பள்ளமோர்குளம் கிராமம், நகராட்சிக்கு சொந்தமான புதிய உரக்கிடங்கில் நுண் உரம் செயலாக்க கூடம் (Construction of Micro Composted Centre) அமைக்கும் பணி. | **60.00** |

புதிதாக மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டுள்ள மேற்காணும் இடத்தில் உடனடியாக பணிகளை செய்து முடிக்கும் பொருட்டு இப்பணியை ஏற்கனவே ஒப்பந்தம் செய்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ்.எம். முனியசாமி அவர்கள் மூலம் பணியினை செய்து முடிப்பதற்கு, மறு திருத்திய நிர்வாக அனுமதி கோரும் கருத்துருவினை சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு வழிமுறையாக அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண். 635/2018/இ1)**

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. இந்நகராட்சி பொறியாளர் அறிக்கையின்படியும், மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக செயற்பொறியாளர் அவர்களின் அறிவுரையின்படியும் திட்டப்பணியினை உடனடியாக செயல்படுத்தும் பொருட்டு, மறு திருத்திய நிர்வாக அனுமதி வழங்க கோரி சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணிக்கு ஏற்கனவே ஒப்பந்தம் செய்துள்ள திட்ட மதிப்பீட்டின்படி திரு.எஸ்.எம். முனியசாமி ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் உடனடியாக மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. இந்நகர்மன்ற தீர்மான எண்.678, நாள்.06.01.2020–ன்படி வழங்கப்பட்ட திருத்திய அனுமதியை மன்றம் ரத்து செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.833 அனுமதிக்கப்பட்டது.</u>**

**பொருள் :13**

15–வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரை மான்யம் 2020–21 ஆம் ஆண்டு (Tied Grant to Non Million Plus Cities for the year 2020-21) முதல் மற்றும் இரண்டாம் தவணைகளின் மானியம் ஒதுக்கீடுகளுக்கு பணிகள் தேர்வு செய்து கருத்துரு அனுப்பி வைக்குமாறு மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக 29.12.2020–ந் தேதிய மின்னஞ்சல் (E-mail) மற்றும் தொலைபேசி செய்தியில் (Telephone message) தெரிவிக்கப்பட்டது. அதன்படி கீழ்கண்டவாறு பணிகள் தேர்வு செய்து பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, இந்நகர்மன்றத்தில் 31.12.2020–ந் தேதி அனுமதி பெறப்பட்டது. அதன் விவரத்தினை மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இராமநாதபுரம் மாவட்ட நகராட்சிளில் மறு சுழற்சி செய்ய இயலாத குப்பைகளைசேர்த்து கையாள புதிதாக தினசரி 30 மெட்ரிக் டன் கையாளத்தக்க வகையில் ஒரு எரியூட்டும் ஆலை (Dry Waste Generator) விகிதாச்சார அடிப்படையில் செலவினத்தை பகிர்ந்து கொள்ளும் வகையில் அமைத்தல். | 70.00 |
| 2. | இந்நகர் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று குப்பைகளைப் பிரித்து எடுத்து சேகரிக்க நான்கு சக்கர டிப்பர் ஆட்டோ ஒரு எண்ணம் வாங்குதல். | 6.75 |
| 3. | இந்கராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 மேலத்தெரு வளாகத்தில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி (OHT) அமைக்கப்படவுள்ள இடத்தில் சுற்றுச் சுவர் கட்டும் பணி. | 12.75 |
| | மொத்தம் | 89.50 |

அதனை தொடர்ந்து, மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக 13.01.2021–ந் தேதிய தொலைபேசி செய்தியில் (Telephone Message) தெரிவித்துள்ளதன்படி, 2020–21ம் ஆண்டு 15–வது நிதிக்குழு மான்யம் (Tied Grant) கீழ் ரூ.89.50 லட்சத்திற்கு பொறியாளர்களால் திருத்திய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இராமநாதபுரம் மாவட்ட நகராட்சிளில் மறு சுழற்சி செய்ய இயலாத குப்பைகளைசேர்த்து கையாள புதிதாக தினசரி 30 மெட்ரிக் டன் கையாளத்தக்க வகையில் ஒரு எரியூட்டும் ஆலை (Dry Waste Generator) விகிதாச்சார அடிப்படையில் செலவினத்தை பகிர்ந்து கொள்ளும் வகையில் அமைத்தல். | 74.40 |
| 2. | இந்நகர் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று குப்பைகளைப் பிரித்து எடுத்து சேகரிக்க நான்கு சக்கர டிப்பர் ஆட்டோ ஒரு எண்ணம் வாங்குதல். | 6.75 |
| 3. | இந்கராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 மேலத்தெரு வளாகத்தில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி (OHT) அமைக்கப்படவுள்ள இடத்தில் சுற்றுச் சுவர் கட்டும் பணி. | 8.35 |
| | மொத்தம் | 89.50 |

மேற்காணும் பணிகளில் வரிசை எண். 2–ல் கண்டுள்ள பணிக்கு இவ்வலுவலக ந.க.எண்.610/2020/இ1, நாள். 18.01.2021ன்படி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரிடம் உரிய அனுமதி பெறுவதற்கு மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் வழியாக கருத்துரு அனுப்பப்பட்டது. அதனை தொடர்ந்து வரிசை எண்.2–ல் கண்டுள்ள பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.25160/2020/பி4, நாள்.29.01.2021–ன்படி நான்கு சக்கர டிப்பர் ஆட்டோ ஒரு எண்ணம் வாங்குவதற்கு ரூ. 6,25,000/– மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இந்நகர் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று குப்பைகளைப் பிரித்து எடுத்து சேகரிக்க நான்கு சக்கர டிப்பர் ஆட்டோ ஒரு எண்ணம் வாங்குதல். | 6.25 |

2020–21 ஆம் ஆண்டு 15–வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரை மான்யம் திட்ட நிதியின் கீழ் இந்நகர் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று குப்பைகளைப் பிரித்து எடுத்து சேகரிக்க நான்கு சக்கர டிப்பர் ஆட்டோ ஒரு எண்ணம் வாங்குவதற்கு ரூ. 6,25,000/–க்கு இந்நகராட்சிப் பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் ஒப்புதலுக்கு முன் வைக்கப்படுகிறது.
(கோப்பு எண். 610/2020/இ1)

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. நான்கு சக்கர டிப்பர் ஆட்டோ ஒரு எண்ணம் வாங்குவதற்கு 31.12.2020–ந் தேதிய கூட்ட நடவடிக்கையில் அனுமதிக்கப்பட்ட ரூ.6,75,000/– மதிப்பீட்டினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.25160/2020/பி4, நாள்.29.01.2021–ன் படியான செயல்முறை ஆணையின்படி ரூ.6,25,000/– என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

2. இந்நகர் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று குப்பைகளைப் பிரித்து எடுத்து சேகரிக்க நான்கு சக்கர டிப்பர் ஆட்டோ ஒரு எண்ணம் வாங்குவதற்கு ரூ.6,25,000/–க்கு பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

3. 2020–21 ஆம் ஆண்டு 15–வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரை மான்யம் திட்ட நிதியில் ரூ.6,25,000/– மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.834 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :14</u>**

15–வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரை மான்யம் 2020–21 ஆம் ஆண்டு (Tied Grant to Non Million Plus Cities for the year 2020-21) முதல் மற்றும் இரண்டாம் தவணைகளின் மானியம் ஒதுக்கீடுகளுக்கு பணிகள் தேர்வு செய்து கருத்துரு அனுப்பி வைக்குமாறு மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக 29.12.2020–ந் தேதிய மின்னஞ்சல் (E-mail) மற்றும் தொலைபேசி செய்தியில் (Telephone message) தெரிவிக்கப்பட்டது. அதன்படி கீழ்கண்டவாறு பணிகள் தேர்வு செய்து பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, இந்நகர்மன்றத்தில் 31.12.2020–ந் தேதி அனுமதி பெறப்பட்டது. அதன் விவரத்தினை மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இராமநாதபுரம் மாவட்ட நகராட்சிளில் மறு சுழற்சி செய்ய இயலாத குப்பைகளைசேர்த்து கையாள புதிதாக தினசரி 30 மெட்ரிக் டன் கையாளத்தக்க வகையில் ஒரு எரியூட்டும் ஆலை (Dry Waste Generator) விகிதாச்சார அடிப்படையில் செலவினத்தை பகிர்ந்து கொள்ளும் வகையில் அமைத்தல். | 70.00 |
| 2. | இந்நகர் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று குப்பைகளைப் பிரித்து எடுத்து சேகரிக்க நான்கு சக்கர டிப்பர் ஆட்டோ ஒரு எண்ணம் வாங்குதல். | 6.75 |
| 3. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 மேலத்தெரு வளாகத்தில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி (OHT) அமைக்கப்படவுள்ள இடத்தில் சுற்றுச் சுவர் கட்டும் பணி. | 12.75 |
| | **மொத்தம்** | **89.50** |

அதனை தொடர்ந்து, மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக 13.01.2021–ந் தேதிய தொலைபேசி செய்தியில் (Telephone Message) தெரிவித்துள்ளதன்படி, 2020–21ம் ஆண்டு 15–வது நிதிக்குழு மானியம் (Tied Grant) கீழ் ரூ.89.50 லட்சத்திற்கு பொறியாளர்களால் திருத்திய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இராமநாதபுரம் மாவட்ட நகராட்சிகளில் மறு சுழற்சி செய்ய இயலாத குப்பைகளை சேர்த்து கையாள புதிதாக தினசரி 30 மெட்ரிக் டன் கையாளத்தக்க வகையில் ஒரு எரியூட்டும் ஆலை (Dry Waste Generator) விகிதாச்சார அடிப்படையில் செலவினத்தை பகிர்ந்து கொள்ளும் வகையில் அமைத்தல். | 74.40 |
| 2. | இந்நகர் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று குப்பைகளைப் பிரித்து எடுத்து சேகரிக்க நான்கு சக்கர டிப்பர் ஆட்டோ ஒரு எண்ணம் வாங்குதல். | 6.75 |
| 3. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 மேலத்தெரு வளாகத்தில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி (OHT) அமைக்கப்படவுள்ள இடத்தில் சுற்றுச் சுவர் கட்டும் பணி. | 8.35 |
| | **மொத்தம்** | **89.50** |

மேற்காணும் பணிகளில் வரிசை எண்.1 மற்றும் 2–ல் கண்டுள்ள பணிகளுக்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரிடம் உரிய அனுமதி பெறுவதற்கு மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் வழியாக கருத்துரு அனுப்பப்பட்டது (இவ்வலுவலக ந.க.எண்.610/2020/இ1, நாள். 18.01.2021).

மேற்படி வரிசை எண்.3ல் கண்டுள்ள பணிக்கு இவ்வலுவலக ந.க.எண்.610/2020/இ1, நாள்.25.01.2021ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட நிலையில், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.25160/2020/பி4, நாள்.29.01.2021–ன்படி வரிசை எண்.2ல் கண்டுள்ள பணிக்கு கீழ்கண்டவாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இந்நகர் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று குப்பைகளைப் பிரித்து எடுத்து சேகரிக்க நான்கு சக்கர டிப்பர் ஆட்டோ ஒரு எண்ணம் வாங்குதல். | 6.25 |

15–வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரை மான்யம் 2020–21ன் கீழ் வரிசை எண்.2ல் கண்டுள்ள பணிக்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் ரூ.6,25,000/–க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், மீதமுள்ள தொகை ரூ.50,000/–க்கு மாற்றுப் பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது என்று, பொறியாளர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1, 16 மற்றும் 21 ஆகிய மூன்று இடங்களில் அமைந்துள்ள கழிவுநீர் ஏற்றும் நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார்கள் தொடர்ந்து இயக்கப்படுவதால் மின்மோட்டார் மற்றும் கழிவுநீர் பம்புகளில் பழுது ஏற்படும் போது கழிவுநீர் பம்ப்பை கழற்றி அவற்றை பழுதுநீக்கம் செய்து மீண்டும் பொருத்துவதற்கு தாமதம் ஏற்படும் நிலையில் கழிவுநீர் சம்ப் (Sump) தொட்டியில் உள்ள கழிவுநீர் வெளியேறி போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் நிலையில் இருப்பதால் மாற்று மின்மோட்டார் பம்ப்பை பொருத்தி கழிவுநீரை வெளியேற்றும் பணிக்கு 5HP மின்மோட்டார், பம்ப் மற்றும் ஸ்டார்டர் வாங்கித் தருமாறு இவ்வலுவலக மின்பணியாளரால் கோரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | 5HP மின்மோட்டார் & பம்ப் | - | 1 எண்ணம் |
| 2) | 16A ஸ்டார்டர் | - | 1 எண்ணம் |

மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி இந்நகராட்சிக்குட்பட்ட 16வது வார்டு புதுக்குடியில் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் நீரேற்றும் நிலையத்திற்கு கூடுதலாக ஒரு எண்ணம் 5HP மின் மோட்டார், பம்ப் மற்றும் ஸ்டார்டர் புதிதாக வாங்குவதற்கு ரூ. 65,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், இச்செலவினத்தை மேற்காணும் திட்ட நிதி ரூ.50,000/– போக மீதமுள்ள தொகை ரூ. 15,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் ஒப்புதலுக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 610/2020/இ1)**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. இந்நகராட்சிக்குட்பட்ட 16வது வார்டு புதுக்குடியில் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் நீரேற்றும் நிலையத்திற்கு கூடுதலாக ஒரு எண்ணம் 5HP மின்மோட்டார், பம்ப் மற்றும் 16A ஸ்டார்டர் வாங்குவதற்கு ரூ.65,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. 2020–21 ஆம் ஆண்டு 15–வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரை மான்யம் திட்ட நிதி ரூ.50,000/– போக மீதமுள்ள தொகை ரூ.15,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.835 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :15</u>**

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்டங்களில், நகராட்சிப் பகுதியில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரில் 2 PPM அளவுக்கு குளோரின் இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளதிற்கிணங்கவும், தற்போது டெங்கு தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், நகராட்சிப் பகுதிகளில் சுத்தமான குடிநீர் வழங்குவதற்கு திரவ நிலையில் குளோரின் செலுத்தும் திட்டத்தினை (Liquid Chlorination System) செயல்படுத்தும் பொருட்டும், இந்நகராட்சிக்கு ஒரு வருடத்திற்கு தேவையான 7280 லிட்டர் ஹைப்போ குளோரின் திரவம் விநியோகம் செய்வதற்குரிய ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ள

பொதுப்பணித்துறை / குடிநீர் வடிகால் வாரிய 2020–2021 ஆம் ஆண்டு விலை விகிதப் பட்டியலில் (Schedule of Rate) ஹைப்போ குளோரின் திரவம் விலைவிகிதங்கள் குறிப்பிடப்படாததால் 28.12.2020–ந் தேதி பொறியாளர்களின் அறிக்கையின்படி உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு 31.12.2020–ந் தேதி இந்நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்காணும் இந்நகர்மன்ற அனுமதியின் அடிப்படையில் இந்நகராட்சிக்கு ஹைப்போ குளோரின் திரவம் (Hypo Chlorine Solution) விநியோகம் செய்வதற்கு லிட்டர் ஒன்றிற்கு GST குறிப்பிட்டு விநியோகம் செய்வதற்கு 06.01.2021–ந் தேதி அறிவிப்பு செய்யப்பட்டு 13.01.2021–ந் தேதி இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவற்றில் ஹைப்போ குளோரின் திரவம் விநியோகம் செய்வதற்கு சரக்கு மற்றும் சேவை வரி நீங்கலாக (Excluding GST) லிட்டர்/ கிலோ ஒன்றிற்கு ரூ.22.50 குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள சூர்யா ஏஜென்ஸி, திண்டுக்கல் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு நகர் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று இந்நகராட்சி பொறியாளர்களால் ரூ.1,85,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ளவும் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 785/2020/இ1)**

**அலுவலகக் குறிப்பு.**

1. இந்நகர்மக்களின் நலன் மற்றும் குடிநீர் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு ஹைப்போ குளோரின் திரவம் இந்நகராட்சிக்கு விநியோகம் செய்யும் பணிக்கு இந்நகராட்சிப் பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1,85,000/–யை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்..

**தீர்மானம் எண்.836 அனுமதிக்கப்பட்டது.**

**ஒம்/– ஆ. தனலெட்சுமி,பி.காம்**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)**
**கீழக்கரை நகராட்சி.**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர் (பொ)**
**கீழக்கரை நகராட்சி.**